கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண். 411/2018 வா.சா.1 பூங்கொடி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 01.09.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

**1)** நான் எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தந்தைவழி தாத்தா செல்லப்ப கவுண்டருக்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்டது . செல்லப்ப கவுண்டருக்கு வழக்கு சொத்து பூர்வீக வழியில் பாத்தியப்பட்டது என காட்டும் ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ. 1 பாக ஆவணத்தில் எந்த அட்டவணைச் சொத்து இவ்வழக்கு சொத்தாகும் என்றால் மேற்படி ஆவண A அட்டவணைச் சொத்து இவ்வழக்கு சொத்தாகும். வா.சா.ஆ. 1 ஆவணத்தின் அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை என் தகப்பனார் தான் அனுபவித்து வந்தாரா என்றால் நானும் என் தகப்பனாரும் சேர்ந்து அனுபவித்து வந்தோம். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 30-10-2005 ஆகும் . எந்த ஊருக்கு நான் திருமணம் ஆகி சென்றேன் என்றால் கெடிமேடு ஆகும். எனக்கு திருமணம் ஆகி 20 ஆண்டு ஆகிறது என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் . B.Com. படித்துள்ளேன்.

3) வா.சா.ஆ. 6 புல வரைபடத்தில் வழக்கு சொத்துக்கும் பிரதிவாதிகள் சொத்துக்கும் இடையிலான எல்லை நேர்கோடாக உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் நில அளவையர் உடன் வழக்கு சொத்தை பார்வையிட்ட போது நான் அங்கு இல்லை என்றால்

சரியல்ல. ( **நீதிமன்ற ஆணையர் திரு. கோபி தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் முறையே நீ.சா.ஆ. 3 மற்றும் நீ.சா.ஆ. 4 எனக் குறியீடு செய்யப்படுகின்றன.**)நீதிமன்ற ஆணையர் தன் அறிக்கை நீ.சா.ஆ. 3-ல் நான் அச்சமயம் அங்கு இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அது தவறாகும் . நானும் என் கணவரும் அங்கு இருந்தோம். நான் அச்சமயம் வழக்கு சொத்தில் இல்லை என்றும் வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வழக்கு சொத்து பார்வையிட்ட போது அங்கு இல்லை என நீதிமன்ற ஆணையர் தன் நீ.சா.ஆ. 3-அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது தவறு என ஆட்சேபணை ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) நான் திருமணத்திற்கு பின் கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன் என்றும் வழக்கு சொத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.சா.ஆ.3 -ல் எதிர் மனுதாரரான எனது சொத்தை சுற்றிலும் கம்பிவேலி காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் பூமிக்கு வடபுறம் கிழமேல் தார் சாலை என்றால் சரிதான். மேற்படி தார் சாலை மேடாகவும் அதிலிருந்து தெற்கு நோக்கி வர வர உயரம் குறைந்து கொண்டே சரிவாக இருக்கும் என்றால் சரிதான். என் பூமி சாலை நோக்கி முகப்பு கொண்டது என்றால் சரிதான். அதே போல் பிரதிவாதி பூமியும் சாலையை ஒட்டி மேடாகவும் அதிலிருந்து தெற்கு நோக்கி வர வர உயரம் குறைந்து கொண்டே சரிவாக இருக்கும் என்றால் சரிதான்.

5) வழக்கு சொத்து விவரத்தில் மாமூல் தட வழி பாத்தியம் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை ஆனால் ஆவணத்தில் உள்ளது. அவ்வாறு எந்த ஆவணத்தில் உள்ளது என்றால் வா.சா. ஆ. 1 மற்றும் வா.சா. ஆ. 2 ஆவணங்களில் உள்ளன. வா.சா. ஆ.2 ஆவணத்தில் தட வழி பாத்தியம் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பக்கம் 5 பொது ஷ ரத்தில் உள்ளது ( **சாட்சியிடம் வா.சா.ஆ. 2 ஆவணம் படித்து பார்க்க கொடுக்கப்பட்டது**) வா.சா.ஆ. 1 ஆவணத்தில்

தட பாத்தியம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் தட வழி பாத்தியம் குறிப்பிடாததால் தான் நான் என் வழக்கு சொத்து விவரத்தில் அதனை குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தட வழி பாத்தியம் இல்லாததால் தான் அது வா.சா.ஆ. 1ஆவணத்தில் அது எழுதப்படவில்லை என்றால் சரியல்ல.

6) என் பூமிக்கு கிழபுறம் உள்ள சொத்தின் புல எண் . 227/1B என்றால் சரிதான் . அது பிரதிவாதிகளின் பூமி என்றால் சரிதான். பிரதிவாதிகளின் பூமியில் தான் வடக்கில் இருந்து தெற்கு செல்ல பிரதிவாதிகள் தடம் அமைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என் பூமியில் புல எண் 227/1A1 -ல் கிழகோட்டில் தார் சாலையிலிருந்து தென்வடலாக தடம் அமைக்கப்பட்டுள்ளது. அத்தடம் ஆனது என் பூமிக்கு தெற்கில் உள்ள என் தந்தையின் சகோதரர் பூமிக்கும் பாத்தியப்பட்டது ஆகும் . மேற்படி விவரங்கள் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் அதை பார்த்தால் தான் எனக்கு தெரியும் . மேற்சொன்னவாறு தட வழி பாத்தியம் இல்லாததால் தான் வா.சா. ஆ. 1 ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல.

7) என் சித்தப்பா பூமிக்கு தெற்கில் உள்ள பூமிக்கும் தெற்கில் பிரதிவாதிகளின் மற்றொரு பூமி உள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு பிரதிவாதிகளின் மற்றொரு பூமி உள்ளது என்றும் நான் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இல்லாததால் தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் மேற்சொன்னவாறு தடம் இருந்து இருந்தால் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் எழுதப்பட்டிருக்கும் என்றும் அப்போதே வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றும் சொன்னால் சரியல்ல.

8)மேற்படி தடத்திற்கு தனி சிட்டா பெற்றுள்ளேனா என்றால் இல்லை . ஆனால் அந்த புல எண்ணுக்கு முழுமையாக சிட்டா பெற்றுள்ளேன். நான் சொன்னது போல் தடம் எனக்கும்

என் சித்தப்பாவிற்கும் பொதுவானதாக இருந்திருந்தால் தனி சிட்டா வழங்கப்பட்டிருக்கும் என்றும் அவ்வாறு தடம் இல்லாததால் தான் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தடம் தொடர்பாக பல முறை வடக்கிபாளையம் காவல் நிலையத்தில் தங்கள் பூமியை நான் ஆக்கிரமிப்பு செய்வதாக புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் என் பூமியில் நான்கு புறமும் கம்பி வேலி அமைத்துவிட்டு பிரதிவாதி பூமியில் தடம் பயன்படுத்த பார்க்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் பிரதிவாதிகள் பல முறை நில அளவை செய்ய முயற்சித்த போது நான் தடுத்தேன் என்றால் சரியல்ல. என் தந்தை 2017-ல் தன் இறப்பு வரை வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருந்தார் என்றும் நான் திருமணத்திற்கு பிறகு என் கணவர் வீட்டில் வசித்து வருகிறேன்என்றும் சொன்னால் நான் திருணத்திற்கு பிறகு வழக்கு சொத்தில் என் கணவருடன் வசித்து வந்தேன். தற்போது கணவர் இறப்பிற்கு பின்னும் அங்கு தான் வசித்து வருகிறேன்.

9) நான் வழக்கு சொத்தில் தான் வசித்து வருகிறேன் என்பதற்கு எந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தடமானது புல எண் 227/1B -ல் தான் உள்ளது என்றும் புல எண் 227/1A1-ல் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

**ஒப்பம் /- ( M.S.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி